

மெட்ரோ ரெயில் நிலையங்களில் உள்ள மின்சார ஸ்கூட்டர்.

## திருமங்கலம், வடபழனி, ஆலந்தூர்

# மெட்ரோ ரெயில் நிலையங்களில் வாடகை மின்சார ஸ்கூட்டர் வசதி

## 1 கி.மீ. தூரத்துக்கு ரூ.3 மட்டுமே கட்டணம்

சென்னை ,செப்.19– சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் பொது மக்கள் மற்றும் மெட்ரோ பயணிகளுக்குபலவசதிகளை வழங்குவதன் ஒரு பகுதியாக ஹவ்டி ஹையர் பைக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து இரு சக்கர வாடகை மின்சார ஸ்கூட்டர் திட்டத்தை திருமங்கலம், வடபழனி மற்றும் ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையங்களில் அறிமுகப்படுத்தி உள்ளது.

**மின்சார ஸ்கூட்டர்**

இந்த வசதியை பயன்படுத்த பயணிகள் தங்களுடைய மொபைல் போனில் ஹல்டி ஹையர் பைக்ஸ் என்ற செயலியை பதிவிறக்கம் செய்து ஏறும் மற்றும் இறங்கும் இடத்தை தேர்ந்தெடுக்கலாம். அதன் பின்னர் அதில் வரும் கியூ ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்தால் உடனடியாக வாகனம் பயணம் செல்லத் தயாராகிவிடும்.

எந்த மையத்தில் இருந்தும் ஸ்கூட்டரை எடுத்துச்சென்று, செயலியில் குறிப்பிட்டுள்ள எந்த மையத்திலும் வாகனத்தை விட்டுச் செல்லலாம். சென்னைக்குள் ஒவ்வொரு 500 மீட்டர் தொலைவிலும் இந்த மையம் அமைந்திருக்கிறது.

**கிலோ மீட்டர் 3 ரூபாய்**

பயணிக்கும் ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ரூ.3 மற்றும் நிமிடத்திற்கு 10 பைசா மட்டுமே வாடகைக் கட்டணம் செலுத்த வேண்டும். பயணிகள் தங்களது முதல் சவாரியை முற்றிலும் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். அடுத்த 5 சவாரிகளில் 50 சத வீதம் தள்ளுபடி அளிக்கப் படுகிறது.

இந்த இருசக்கர வாகனங் களில் பயணிகளின் பாது காப்பிற்காக இரட்டை அடுக்கு பாதுகாப்பு வழங் கப்பட்டுள்ளது. இரு சக்கர வாகனங்களில் பூசப்பட்டுள்ள வண்ணத்தில் வைரசை எதிர்க்கும் கரைசல் கலந்து பூசப்பட்டுள்ளது.

**சுத்தப்படுத்தப்படும்**

ஒவ்வொரு சவாரிக்கு பிறகும் இரு சக்கர வாகனம் மற்றும் தலைக்கவசங்கள் சுத்தப்படுத்தப்படுகின்றன.

பொதுமக்களிடம் இருந்து வரும் வரவேற்பின் அடிப் படையில், இந்த வசதி மேலும் பல சென்னை மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் அறிமுகப்படுத்தப்படும்.